# 32. பொதுத்துறையின் பங்கு (ROLE OF PUBLIC SECTOR)

நமது நாட்டுப் பொருளாதாரத்தில் பொதுத்துறையின் பங்கு வளர்ந்து வருகின்றது. நாடு விடுதலை பெறுவதற்கு முன்பு இருப்புப் பாதை, அஞ்சல், போக்குவரத்து, துறைமுகங்கள், சில குறிப்பிட்ட தொழில்கள் ஆகியவற்றில் மட்டும் அரசின் பங்கு இருந்தது. இப்பொழுது பொதுத்துறையின் பங்கு விரிவடைந்து வருகின்றது.

இந்தியா போன்று வளர்கின்ற பொருளாதாரத்தில் விரைவான வளர்ச்சிபெற அரசு நேடியாக தொழில்களைத் தொடங்குவதும் இருக்கின்ற சில முக்கியத்தொழில்கள், வங்கிகள், காப்பீட்டு நிறுவனங்கள் போன்றவற்றை ஏற்று நடத்துவதும், கட்டுப்படுத்துவதும் தேவையாகின்றது. இதனால் பொதுத்துறையின் பங்கு மிகுந்து வருகின்றது. பொதுத்துறை வளர்வதற்கும், விரிவாக்கம் பெறுவதற்கும் அதனுடைய பங்கு முக்கியத்துவம் பெறுவதற்கான காரணங்களைத் தொகுத்துக் கூறலாம்.

1. **விரைவான பொருளாதார வளர்ச்சி:** விரைவான பொருளாதார வளர்ச்சி பெற வேகமான தொழில் வளர்ச்சி தேவை. திட்டமிட்ட பொருளாதாரத்தில் தனியார் துறையை மட்டும் நம்பி குறியீடுகளை அடையும் வகையில் தொழில் வளர்ச்சியைப் பெற முடியாது. அரசு நேரடியாகத் தொழில் துறையில் ஈடுபடுவது காலத்தின் கட்டாய மாகின்றது. வளர்ச்சி குறைந்த நாடுகளில் தொழில் வளர்ச்சிக்கு ஆதார மான அடிப்படை, கனரகத் தொழில்களுக்கு முன்னுரிமை கொடுத்து வளர்க்க வேண்டியுள்ளது. இந்தப் பணியை தனியார் துறை ஏற்றுச் செய்ய முடியாது. ஆதலால் பொதுத்துறையின் நிறுவனங்கள் (Pulic Enterprises) பல்வேறு துறைகளிலும் வளர,விரிவடைய வேண்டியுள்ளது.

2. **தனியார் துறை ஈடுபடத் தயங்கும் தொழில்களை ஏற்று நடத்துதல்:** தனியார் துறை மிகவும் ஆதாயம் கிடைக்கின்ற தொழில்களைத்தான் ஏற்று நடத்துகின்றன. மேலும் மிகவும் அதிகமாக முதலீடு செய்யக்கூடிய தொழில்களை நடத்தத் தயங்குகின்றன; சில வேளைகளில் இயலாமல் இருக்கின்றன. குறிப்பாக, இரும்பு, எஃகு போன்ற கனரகத் தொழில்க்ள் பொறியியல் பணிகள். பேரளவு இரசாயன, உர உற்பத்தி நிறுவனங்கள், எண்ணெய் எடுக்கும் அமைப்புகள் போன்ற வளர்ச்சிக்குத் தேவையான தொழிற் பணிகளை பொதுத் துறைதான் ஏற்று நடத்த முடியும். அரசினால் சட்டங்களின் மூலம் தக்க நிறுவனங்களை உருவாக்கி. வேண்டிய நிதி, தொழில் நுட்பம், மனித

வளங்களைத் திரட்டி, தனியார் துறை தயங்கும் தொழில்களைத் தொடங்கி நாட்டின் வளர்ச்சிக்குத் துணை செய்ய முடியும்.

**3. தனியார் துறையைக் கட்டுப்படுத்த:** தொழில் துறைகளில் தனியார் கை ஓங்குகின்ற பொழுது, முற்றுரிமை நிறுவனங்களும், அமைப்புக்களும் தோன்றி வலுப்பெறுகின்றன. இவற்றின் குறிக்கோள் கோடி, கோடியாக இலாபத்தைக் குவிப்பதாகும். ஆதலால் இவை விருப்பம் போல விலையை நிர்ணயித்துக் கொண்டு நுகர்வோரைச் சுரண்டுகின்றன. இந்நிலையை மாற்ற, பொதுத்துறை நிறுவனங்கள் பல்வேறு துறைகளில் நுழைந்து, வளர்ந்து, முற்றுரிமைகளை முறியடித்து, நியாயமான விலை நிலவச் செய்து, மக்களுக்கு பாதுகாப்பளிக்க வேண்டும். பொதுத்துறை நிறுவனங்களின் வளர்ச்சி தனியார் துறையை நேரடியாகவும், மறைமுகமாகவும் கட்டுப்படுத்தும்.

**4. மூலவளங்களைச் சரியாகப் பயன்படுத்துதல்:** நாட்டிலிருக்கும் இயற்கை வளங்களையும், பிற மூலவளங்களையும் சரியாகத் திட்டமிட்டு, பகிர்ந்தளித்துப பயன்படுத்தினால்தான் முறையான தொழில் வளர்ச்சியைப்பெற இயலும். தனியார் துறை இலாப நோக்கோடு செயல்படுவதால் மூலவளங்களைச் சரியாகவும், முறையாகவும் பயன்படுத்தாது. பொதுத்துறை மக்கள் நலனுக்கு முன்னுரிமையளித்து நாட்டின் வளங்களைச் சீராகப் பயன்படுத்தும்.

**5. வட்டார ஏற்றத்தாழ்வுகளைப் போக்குதல்:** நமது நாட்டில் எல்லா மாநிலங்களும், எல்லா வட்டாரங்களும் ஒன்றுபோல் தொழில் வளர்ச்சி பெற்றிருக்கவில்லை. அவற்றிற்கிடையில் வளர்ச்சியில் மிகுந்த ஏற்றத்தாழ்வு காணப்பெறுகின்றது. இந்நிலையை மாற்ற இந்திய அரசு, பின்தங்கிய பகுதிகளுக்கு முன்னுரிமை கொடுத்து,அங்கு பெருந் தொழில்கள் வளர பொதுத்துறையின் மூலம் தக்க நடவடிக்கைகள் எடுக்கின்றது. இதனால் நாட்டில் எல்லா வட்டாரங்களுக்கும் இடையில் சமச்சீர் வளர்ச்சி ஏற்பட வாய்ப்பு இருக்கின்றது.

**6. பொருளாதார வளர்ச்சிக்கு நிதி வளங்களைப் பெறுதல்:** நாட்டின் பொருளாதார வளர்ச்சிக்கு வேண்டிய நிதியினைப் பெற பொதுத்துறை நிறுவனங்கள் துணைசெய்கின்றன. அரசு நிறுவனங்களில் கிடைக்கின்ற ஆதாயத்தையும், எச்ச வருவாயையும் பொதுத்துறை நிறுவனங்களின் வளர்ச்சிக்கும் விரிவாக்கத்திற்கும் புதிய தொழில்களைத் தொடங்கவும் முதலீடு செய்யலாம். இது பொருளாதார வளர்ச்சியை விரைவுபடுத்தும்.

**7. செல்வம், வருவாயிலுள்ள ஏற்றத்தாழ்வுகளைக் குறைக்க:** தனியார்துறை வளர்கின்றபொழுது, செல்வமும் அதனை ஒட்டி வரும் வருவாயும் ஒரு சிலரின் கையில் குவிகின்றது. இதனால் சமுதாயத்தில்



ஏற்றத்தாழ்வு மிகுகின்றது. பொதுத்துறை வளர்ச்சியில் ஆதாயம் அரசுக்குப்போகின்றது. வருவாய்ப் பகிர்வில் கட்டுப்பாட்டைக் கொண்டுவர முடிகின்றது. இதனால் சமுதாயத்திலுள்ள ஏற்றத்தாழ்வு குறைய வாய்ப்பு ஏற்படுகின்றது.

**8. மேல்மட்டப் பொருளாதார நடவடிக்கைகளைக் கட்டுப்படுத்த:** கனரகத் தொழில்களும், பெரிய தொழில், நிதி நிறுவனங் களும் பொதுத் துறையில் இருக்கின்றபொழுது அரசினால் உயர்மட்ட பொருளாதார நடவடிக்கைகளைக் கட்டுப்படுத்தவும் நெறிப்படுத்தவும் இயலும். நாட்டின் பொருளாதார வளர்ச்சி நிலைக்கேற்ப முதலீடு செய்தல், உற்பத்தியைப் பெருக்குதல், விலை நிர்ணயம் செய்தல் ஆகியவற்றை அரசு பொதுத்துறை நிறுவனங்களின் மூலம் திறம்படச் செய்ய முடியும்.

**9. தனியார் துறைக்கு உதவுதல்:** தனியார் துறையின் வளர்ச்சிக்கு உதவுகின்ற வகையிலும் பொதுத்துறையின் பணிகள் அமையும். குறைந்த விலையில் மின்சாரம், உரம், விதைகள் போன்றவற்றை வழங்குதல், சிறுதொழில்களுக்குத் தேவையான எந்திரங்களை உற்பத்தி செய்து அளித்தல் மூலப்பொருட்களைக் கொடுத்தல் போன்றவை தனியார் துறையின் வளர்ச்சிக்கு உதவும். பொதுத்துறையின் நோக்கம் வலுவற்ற, பின்தங்கியிருக்கும் தனியார் துறைகளையும் வளர்ப்பதாக இருக்கும்.

**10. இயற்கை வளங்களைக் கட்டிக் காத்தல்:** தனியார் துறை இலாப நோக்கோடு செயல்படுகின்றபொழுது, சரியான கொள்கையின்றி காட்டு வளங்களையும் கனிவளங்களையும் அழித்துவிடுகின்றது. அதன் பின்விளைவுகளான சுற்றுப்புறச் சூழல் சீர்கெடல், பருவமழை பாதித்தல், நோய்கள் பரவுதல் போன்றவற்றைப் பற்றிக் கவலைப்பட மாட்டார்கள். பொதுத்துறை இயற்கை மூலங்களை முறையாகப் பயன்படுத்தும், நீண்ட காலக் கண்ணோட்டத்தோடு இயற்கை வளங்களைப் பயன்படுத்தும்.

**11. முன்மாதிரி தொழில் நடத்துவோராக விளங்குதல்:** தனியார் துறை நிறுவனங்கள் செயல்படுவதில் பல குறைகள் உள்ளன. இலாபத்தில் குறியாக இருப்பதால் தொழிலாளர்கள் நலனைக் கவனிப்பதில்லை. பணி செய்யும் இடங்களையும் சரியாக வைத்திருப்பதில்லை. ஒரு தொழில் நிறுவனம் எப்படிச் செயல்பட வேண்டுமென்பதை பொதுத்துறை நிறுவனம் செயல்பட்டுக் காட்டும்.

**12. சமதர்ம சமுதாயத்தை உருவாக்க:** பொதுத்துறை நாட்டில் சமதர்ம சமுதாயம் மலரத்துணை செய்கின்றது. பொதுத்துறை நிறுவனங்கள் மக்களின் தேவைகளை நிறைவு செய்யும் வகையில் உற்பத்தியை அமைத்துக் கொள்ளும். முழுநிறை வேலைவாய்ப்பைப் பெறும் வகையில் தொழில்கள் செயல்படும். விலை ஏழை எளியவர்களுக்குச் சாதகமாக இருக்கும். வருவாயில் ஏற்றத்தாழ்வு மிகுதியாக

Scanned with CamScanner

இருக்காது. மொத்தத்தில் சமதர்ம சமுதாயத்தை உருவாக்கும் வகையில் பொதுத்துறையின் பணிகள் இருக்கும்.

**பொதுத்துறையில் குறைகள்:** பொதுத்துறை நிறுவனங்களிலிருக்கும் கீழ்க்கண்ட குறைகளைத் திறனாய்வாளர்கள் சுட்டிக் காட்டுகின்றன. *1. இடர்பாட்டை ஏற்க விருப்பமின்மை:* பொதுத் துறை நிறுவனங்களை நடத்துகின்றவர்கள் மாத ஊதியம் பெறுகின்றவர்கள். நிறுவனத்தின் ஆதாயத்தில் இவர்களுக்குப் பங்கில்லை. ஆதலால் முயன்று, இடர்பாடுகளை ஏற்றுதொழில் வளர்ச்சியில் ஈடுபட மாட்டார்கள். இதனால் தொழில் வளர்ச்சி எதிர்நோக்கும் வேகத்தில் நடைபெறுவதில்லை. *2. திறமையற்ற நிர்வாகம்:* முன் அனுபவமற்றவர்கள் நிர்வாகிகளாக இருப்பதாலும் ஒவ்வொன் றிலும் அரசின் விதி முறைகளையும், கட்டுப்பாடுகளையும் பின்பற்ற வேண்டியிருப்பதாலும் பொதுத்துறை நிர்வாகம் திறமையற்ற தாக இருக்கின்றது. *3. அரசியல் த்லையீடு:* அரசியல் வாதிகளின் தலையீடு மிகுதியாக இருக்கும். இதனால் பொதுத் துறையின் செயல்பாடு பாதிக்கப்படும். *4. வீணாகுதலும் இலஞ்சமும்:* பல பொதுத்துறை நிறுவனங்கள் பொருட்களை வீணாக்குவதையும், அவற்றில் இலஞ்சம் ஊடுருவி நிற்பதையும் காணலாம். *5. சரியான நிர்வாகிகள் கிடைக் காமை:* பொதுத்துறை நிறுவனங்களை நிர்வகிக்க தக்க, பயிற்சிபெற்ற ஆட்கள் கிடைப்பதில்லை. இதனால் பொதுத்துறை பின்தங்கி விடுகின்றது.

*நிறைவுரை:* பொதுத்துறை நிறுவனங்களிடம் குறைகள் இருந்த போதிலும்,அவை காலத்திற்கேற்ற நிறுவனங்கள், அவறைச் செம்மையாகப் பயன்படுத்தினால், எண்ணியவை கிடைக்கும்.

# 33. இந்தியாவில் பொதுத் துறையின் வளர்ச்சி

நாடு விடுதலை பெற்ற பிறகு, குறிப்பாக ஐந்தாண்டுத் திட்டங்களை மேற்கொண்ட பிறுகு தொழில் வளர்ச்சியில் நமது அரசு தனிக் கவனம் செலுத்தி வருகின்றது. தொழில்களின் அமைப்பு முறையில் பொதுத்துறை மிகுந்த பங்கு பெறவேண்டுமென்பது அரசின் தொழிற் கொள்கையாகும். 1956ஆம் ஆண்டுத் தொழிற்கொள்கை, பல முக்கிய தொழில்களை பொதுத்துறைக்கு ஒதுக்கி, பொது துறைக்கு அடித்தளம் அமைத்துத்தந்தது. நமது தொழிற் கொள்கைகளும், ஐந்தாண்டுத் ட்டங்களும் அளித்த வாய்ப்பினால் இப்பொழுது பொதுத்துறை றிப்பிடத்தக்க வகையில் வளர்ந்துள்ளது.



## I. பொதுத்துறை நிறுவனங்களின் இன்றைய வளர்ச்சி நிலை

**முக்கியத்துவம்:** நமது நாட்டில் பொதுத்துறை பெற்றிருக்கின்ற வளர்ச்சியின் மூலம் நாட்டின் பொருளாதாரத்தில்- தொழிற் வளர்ச்சியில்-முக்கியமான இடத்தைப் பெற்றிருக்கின்றது. 1951 ஆம் ஆண்டில் அரசின் துறைகளாக இல்லாமல் இருந்த மத்திய அரசின் பொதுத்துறை நிறுவனங்கள் ஐந்துதான். இவற்றின் மொத்த முதலீடு 29 கோடி ரூபாய். 1998 ஏப்ரலில் வங்கிகள், நிதி நிறுவனங்கள் அரசுத்துறைகளின் பொறுப்பிலுள்ள அஞ்சல்துறை, இரயில் போக்குவரத்து துறைமுகங்கள்தவிர இருந்த ,பொதுத்துறை நிறுவனங்கள்242 இவற்றின் மொத்த முதலீடு ரூ.2.03,151கோடி கீழ்க்கண்ட விவரங்கள் மேலும் பொதுத்துறையின் சிறப்பிடத்தை விளக்கும்.

1. நாட்டின் மொத்த வருவாயில் நான்கில் ஒரு பங்கைப் பொதுத்துறை உருவாக்கித் தருகின்றது.

2. சமீபகாலத்தில் உள்நாட்டு மூலதன ஆக்கத்தில் பொதுத்துறையின் பங்கு 45 முதல் 50 சதவிகிதம் வரை இருக்கின்றது.

3. அமைப்புத் துறையில் கிடைக்கின்ற வேலைவாய்ப்பில் சுமார் 70 சதவிகிதம் பொதுத்துறை நிறுவனங்களில் கிடைக்கின்றது.

4. நிலக்கரி, எண்ணெய் சுத்திகரிப்பு, இரும்பு, எஃகு, காகிதம் போன்று எல்லா முக்கியமான துறைகளிலும் பொதுத்துறை நிறுவனங்கள் குறிப்பிடத்தக்க அளவில் பங்கு பெறுகின்றன. பொருளாதார வளர்ச்சிக்குத் தேவையான 50 வகையான பொருட்களையும், பணிகளையும் பொதுத்துறை நிறுவனங்கள் வழங்குகின்றன.

**மத்திய அரசின் பொதுத்துறை:** 1998- ஏப்ரலில் மத்திய அரசின் கீழிருந்த 242 நிறுவனங்களின் ரூ.2,03,151 கோடியில், பொருட்கள் உற்பத்தி செய்யும் நிறுவனங்களில் 76 சதவிகிதமும் சேவைத் துறையில் 24 சதவிகிதமும் முதலீடு செய்திருந்தனர்.

பொதுத்துறையில் மிக அதிகமாக சக்தி (Power) துறையில் முதலீடு செய்துள்ளோம். சக்தி துறையில் ரூ.26,014 கோடியும்(19.1 சதவிகிதம்), எஃகுத் தொழிலில் ரூ. 18,149 கோடியும் (13.4%), பெட்ரோலியம் தொழில் ரூ. 15,954 கோடியும் (11.5%) நிலக்கரியிலும் லிக்னைட்டிலும் ரூ.14,211 கோடியும் (10.4%) முதலீடு செய்திருக்கின்றோம்.

பொதுத்துறையை வளர்ப்பது அரசின் கொள்கையாக இருந்ததால், திட்டமிட்டு பொதுத்துறை தொழில்களில் கணிசமான அளவு முதலீடு செய்திருக்கின்றோம். கனரகத் தொழில்களையும், அடிப்படைத் தொழில்களையும், மின்சக்தி, போக்குவரத்து, செய்தித் தொடர்புகள் போன்ற அகக்கட்டுமானங்களையும், நாட்டைத் தொழில்

Scanned with CamScanner

மயமாக்குவதற்காகு பின்புலத்தையும் அரசு ஏற்படுத்திக் கொடுத்திருக்கின்றது. இதற்கேற்ற வகையில் பொதுத்துறையின் முதலீட்டு விகிதம், 1960-61 முதல் 1968-69 வரை 19.3 சதவிகிதமும், 1968-69 முதல் 1973-74 வரை 9.9 சதவிகிதமும், 1973-74முதல் 1980-81 வரை 16.5 சதவிகிதமும், 1980-81 முதல் 1991-92 வரை 18.3 சதவிகிதமும் வளர்ந்திருப்பது குறிப்பிடத்தக்கது.

*மாநில அரசுகளின் பொதுத்துறைகள்:* மாநில அரசுகளும் பொதுத்துறையில் தொழில்களையும் சேவை நிறுவனங்களை அமைத்துள்ளன. ஆனால் அவைபற்றி சரியான, விரிவான புள்ளிவிவரங்கள் கிடைக்கவில்லை. கிடைத்திருக்கின்ற விவரங்களின் அடிப்படையில் ஓரளவு அறிந்துகொள்ளலாம்.

1986- மார்ச்சு 31 இல் 24 மாநிலங்கள் நடத்துகின்ற 636 பொதுத் துறை நிறுவனங்கள் இருந்தன. இவற்றின் முதலீடு 1977 மார்ச்சு 31 இல் 2,860 கோடியாக இருந்தது. 1986 மார்ச்சில் ரூ. 10,000 கோடியாகக் கூடியிருந்தது. இவற்றோடு மாநில மின் வாரியங்கள், மாநில சாலைப் போக்குவரத்துக் கழகங்களையும் சேர்த்துக்கொண்டால் 1986 மார்ச்சு 31 இல் மாநில அரசுகளின் மொத்த முதலீடு ரூ. 25,000 கோடியாகும். மாநில அரசுகளின் பொதுத்துறை முதலீடு ஆண்டுக்கு 20 சதவீதம் வரை கூடிவருகின்றது.

மாநில அரசுகளின் பொதுத்துறை நிறுவனங்களை (i) அரசுத் துறைகள் நிர்வகிப்பவை; (ii) தனிக்கழகங்களும் வாரியங்களும் நடத்துபவை; (iii) பொது நிறுவனங்கள் (Public Corporations) (iv) பங்கு நிறுவனங்கள் (Companies) என நான்கு வகைகளாகப் பிரிக்கலாம்.

## II. இந்தியப் பொதுத்துறை நிறுவனங்களின் பங்கு

நமது நாட்டில் பொதுத்துறை நிறுவனங்களின் பங்கை முழுமையாக அறிந்துகொள்ள, மத்திய அரசு நடத்தும் பொதுத்துறை நிறுவனங்களை மட்டுமின்றி, மாநில அரசு, உள்ளாட்சி மன்றங்கள் நடத்துகின்ற எல்லாப் பொது நிறுவனங்களையும் கணக்கில் எடுத்துக் கொள்ள வேண்டும். மேலும் எந்த ஒரு தனி அளவுகோலை மட்டும் வைத்துக் கொண்டு பொதுத்துறை நிறுவனங்களை மதிப்பிட முடியாது. வேலைவாய்ப்பு, முதலீடு, உற்பத்தி அளவு. வருவாய், சேமிப்பு, மூலதன ஆக்கம் போன்ற அளவுகோலை வைத்துக் கொண்டு மதிப்பிட வேண்டும்.

**(i) பொதுத்துறையில் வேலைவாய்ப்பு:** பொதுத் துறையில் வேலைவாய்ப்பு இரண்டு வகைகளில் இருக்கின்றது. ஒன்று, அரசின் நிர்வாகம், பாதுகாப்புத்துறை, மற்றும் சுகாதாரம், கல்வி, ஆராய்ச்சி ஆகிய அரசுத்துறையில் பணியாற்றுகின்றவர்கள் இந்த வகை. இரண்டாவது, மத்திய அரசு, மாநில அரசு, உள்ளாட்சி



ஆகியவற்றின் பொதுத் துறை நிறுவனங்களில் பணியாற்றுகின்றவர்கள் மற்றுமொரு வகை. இரண்டு வகைகளிலும் சேர்ந்து மொத்தமாக பொதுத்துறையில் வேலை பார்த்தவர்களின் எண்ணிக்கை 1971 இல் 107 இலட்சம்பேர்; 1991 மார்ச்சில் 190 இலட்சம்பேர். மொத்த உழைப்பாளர்களின் எண்ணிக்கையில் இது 66 சதவிகிதம். 90 சதவிகித உழைப்பாளர்கள் அமைப்பற்ற தனியார் துறையில் பணிசெய்கின்றனர். பொதுத் துறையில் 10 சதவிகித தொழிலாளர்கள் அமைப்புக்குள்ளிருக்கும் துறைகளை (Organised Sectors) மட்டும் கணக்கில் எடுத்துக் கொண்டால், இதில் பொதுத்துறை நிறுவனங்களில் பணியாற்றுகின்றவர்கள் 71 சதவிகிதம். இதிலிருந்து அமைப்புள்ள துறைகளில் பொதுத்துறை மிகுதியாக வேலை வாய்ப்பளிக்கும் துறை என்பது தெளிவாகின்றது.

**(II) நாட்டு வருவாயில் பங்கு:** நிகர உள்நாட்டு உற்பத்தியில் (Net Domestic Product) பொதுத்துறையின் திட்டக் காலத்தில் கணிசமாகக் கூடியுள்ளது. 1950-51 இல் நிகர உள்நாட்டு உற்பத்தியில் பொதுத் துறையின் பங்கு 7.5 சதவிகிதம். இது 1984-85 இல் 24.6 சதவிகிதமாகக் கூடியுள்ளது. இதில் பொதுத்துறை நிறுவனங்களின் பங்கு 15.3 சத விகிதம்; அரசுத் துறைகளின் பங்கு 9.6 சதவிகிதம். பொதுத்துறை வேக மாக வளர்ந்ததால் நாட்டு வருவாயில் அதனுடைய பங்கும் கூடிவந்துள்ளது.

**(III) சேமிப்பிலும் மூலதன ஆக்கத்திலும் பங்கு:** முதல் திட்டக் காலத்தில் (1951-56) மொத்த நாட்டு வருவாயில் மொத்தச் சேமிப்பு 10.4% இதில் பொதுத்துறையின் பங்கு 17%. ஏழாம் திட்டக்காலத்தில் (1985-90) மொத்தச்சேமிப்பு 20.4%. இதில் பொதுத்துறையின் பங்கு 2.3% இக்காலத்தில் மொத்த மூலதன ஆக்கம் 10.7 சதவிகிதத்திலிருந்து 22.8 சதவிகிதமாகக் கூடியுள்ளது. பொதுத்துறையின் பங்கு 3.5 சதவிகிதத் திலிருந்து 10.7 சதவிகிதமாகக் கூடியிருக்கின்றது. நாட்டின் சேமிப்பை விட மூலதன ஆக்கத்தில் பொதுத்துறையின் பங்கு மிகுதியாக இருப்பது கவனிக்கத்தக்கது.

**(iv) மூலதன இருப்பில் பங்கு:** நாட்டில் ஒரு குறிப்பிட்ட காலத்தில் உற்பத்தி செய்வதற்காக வைத்திருக்கின்ற எந்திரங்கள், தொழிற்கூடங்கள். கருவிகள். பிறமூலதனப் பொருட்களை மூலதன இருப்பு (Capital Stock) என்கின்றோம். இதனை ஒட்டி நாட்டின் தொழில் வளர்ச்சி அமையும். 1960-61 இல் நமது நாட்டிலிருந்த மொத்த மூலதன இருப்பு ரூ.62,966 கோடி. இதில் பொதுத்துறையின் பங்கு ரூ. 16,377 கோடி. அதாவது 26% 1979-89 இல் நாட்டின் மொத்த மூலதன இருப்பு ரூ.184,657 கோடியாகக் கூடியது. இதில் பொதுத்துறையின் பங்கு ரூ.68, 478 கோடி. அதாவது 37% பொதுத்துறை கனரக, ஆதாரத் தொழில்

Scanned with CamScanner

களில் மிகுதியாக முதலீடு செய்திருப்பதால் மூலதன இருப்பில் அதன் பங்கு குறிப்பிடத்தக்க வகையில் கூடியிருக்கின்றது.

(v) விற்பனையில்பங்கு நாட்டில்: எவ்வளவு பொருட்களும் பணிகளும் கிடைக்கின்றனவென்பதை, மொத்த விற்பனை காட்டுகின்றது. நமது நாட்டில் மொத்த விற்பனையில் 1970-71 முதல் 1987-88 வரையுள்ள காலத்தில் ஆண்டிற்கு சராசரி 18.2 சதவிகிதமாக அதிகரித்திருக்கின்றது. இது பொதுத்துறை பொருள் உற்பத்தி யிலும் விற்பனையிலும் விரிவான முறையில் செயல்பட்டுக் கொண்டி ருப்பதைக் காட்டுகின்றது.

(vi) அகக் கட்டுமான வளர்ச்சியில் பொதுத்துறை: நமது நாட்டில் தொழில் வளர்ச்சி வலுவான அடிப்படையில் அமைய அதற்கு வேண்டிய அகக்கட்டுமானங்களான போக்குவரத்து, செய்தித் தொடர்பு மின்சார வளர்ச்சி, ஆகிய தொழில்களை வளர்க்க வேண்டும். இந்தப் பணியைப் பொதுத்துறை சிறப்பாகச் செய்திருக்கின்றது. தனியார் துறை பெருமளவில் முதலீடு செய்து, காத்திருக்கத் தயங்கும் தொழில்களில் பொதுத்துறை முதலீடு செய்கின்றது. பொதுத்துறையின் முயற்சியால் அகக்கட்டுமானங்கள் உருவாகியிருப்பது போற்றத்தக்கது.

(vii) தொழில் வளர்ச்சிக்கான அடிப்படையை அமைத்தல்: நமது நாட்டில் பொதுத்துறைக்கென சில தொழில்களை தொழிற் கொள்கை ஒதுக்கித்தந்தது. நாட்டிற்குத் தேவையான நிலக்கரி, இரும்பு, எஃகு, விமானக் கட்டுமானங்கள், கப்பல் கட்டுதல் போன்ற தொழில் களைப் பொதுத்துறை வளர்த்துள்ளது. இதனால் விரைவான தொழில் வளர்ச்சிக்கான சூழலை பொதுத்துறை உருவாக்கியி ருக்கின்றது. இது பொதுத்துறையின் குறிப்பிடத்தக்க சாதனைகளில் ஒன்றாகும்.

(viii) பல்வேறு வகைகளான தொழில்களின் வளர்ச்சி: பொதுத்துறை இரும்பு, எஃகு, நிலக்கரி, எந்திரங்கள் உற்பத்தி போன்ற கனரக, பெரியதொழில்களை மட்டுமின்றி, மருந்துகள், இரசாயனங்கள், துணி, உணவுப்பொருட்கள், கடிகாரம் போன்ற முக்கிய பொருட்களை உற்பத்தி செய்யும் தொழில்களையும் பொதுத்துறை தொடங்கி யிருக்கின்றது. பித்தளை, ஈயம், நிலக்கரி, பெட்ரோலியப் பொருட்கள் போன்றவற்றை நூற்றுக்கு நூறு பொதுத்துறையே நடத்துகின்றது. பல முக்கியமான பொருட்களின் உற்பத்தியில் 50 முதல் 95 சதவிகிதம் பொதுத்துறையின் கையிலிருக்கின்றது.

(ix) ஏற்றுமதியில் பொதுத்துறையின் பங்கு: நமது நாட்டுத் தொழில் வளர்ச்சிக்கும், மக்கள் தேவைக்கும் வேண்டிய பொருட்களை உற்பத்தி செய்யும் நோக்கில் பொதுத்துறைத் தொழில்களைத் தொடங்கிய போதிலும், சில பொதுத்துறைத்



தொழில்களின் வளர்ச்சி நமது ஏற்றுமதிக்கு ஆக்கமும் ஊக்கமும் தந்திருக்கின்றது. கைவினைப் பொருட்களையும், சிலவகைப் பொறியியல் பொருட்களையும், வேறு சில புதிய பொருட்களையும் பொதுத் துறைத் தொழில்கள் உற்பத்தி செய்து ஏற்றுமதி செய்கின்றன. ஹிந்துஸ்தான் எஃகு நிறுவனம் (The Hindustan Steel Ltd), பாரத் எலக்ட்ரானிக் நிறுவனம் (The Bharat Electronics Ltd), ஹிந்துஸ்தான் எந்திரக்கருவிகள் நிறுவனம் (The Hindustan Machine Tools) போன்ற நிறுவனங்களின் பொருட்களுக்கு வெளி நாடுகளில் நல்ல வரவேற்பு இருக்கின்றது. இதனால் நமது நாட்டின் ஏற்றுமதி கூடியிருக்கின்றது. பொதுத்துறைத் தொழில் நிறுவனங்களின் ஏற்றுமதி 1965-66 இல் ரூ.35கோடியாக இருந்தது. 1969-70 இல் ரூ.170 கோடியாகவும், 1984-85 இல் ரூ. 5,831 கோடியாகவும், 1991-92 இல் ரூ. 9,198 கோடியாகவும் உயர்ந்திருப்பது போற்றத்தக்கது.

(x) உள்நாட்டு வளங்களைப் பெருக்குதல்: தேய்மானங்களுக்கு ஒதுக்கீடுசெய்வதன் மூலமாகவும் ஆதாயத்தைப் பகிர்ந்து கொடுக்காமல் வைத்திருப்பதன் வாயிலாகவும் உள்நாட்டு வளங்களை (Internal Resources) உருவாக்க முடிகின்றது. ஐந்தாண்டுத் திட்டக் காலத்தில் இம்முறையில் பொதுத்துறை நிறுவனங்கள் ரூ. 3,439 கோடி உள்நாட்டு வளங்களை உருவாக்கியுள்ளன. இது ஆறாம் திட்டக் காலத்தில் (1980-81-1984-85) ரூ. 11,721 கோடியாகவும், (1990-91-1991-92) இல் ரூ. 24,376 கோடியாகவும் உயர்ந்துள்ளது. இந்த வளர்போக்கு பொதுத்துறைக்குச் சிறப்பைத் தேடித் தந்துள்ளது.

(xi) மத்திய அரசின் கருவூலத்திற்கு வரவு: மத்திய அரசின் கருவூலத்திற்கு பொதுத்துறை நிறுவனங்கள் பங்குத்தொகை (Dividends), நிறுவன வரிகள், ஆயத்தீர்வைகள், சுங்கவரிகள் மூலம் பணம் செலுத்துகின்றது. அரசு பொருளாதர வளர்ச்சிக்குத் தேவையான மூலதனத்தை உருவாக்க இது துணை செய்கின்றது. பொதுத்துறை நிறுவனங்களின் மூலம் மத்திய அரசின் கருவூலத்திற்கு 1985-1986 இல் ரூ. 9,061 கோடி கிடைத்தது. இது 1991-92 இல் ரூ. 20,366 கோடியாக உயர்ந்திருக்கின்றது. இதுவும் நாட்டிற்குப் பொதுத் துறையின் மூலம் கிடைக்கின்ற நன்மைகளில் ஒன்றாகும்.

(xii) துணைத் தொழில் வளர்ச்சி: நாட்டிற்குத் தேவையான துணைத் (Ancillary) தொழில்களின் வளர்ச்சிக்கு பொதுத் துறை குறிப்பிடத்தக்க அளவில் துணை செய்கின்றது. இத்துணைத் தொழில்கள் சிறுதொழில்களின் வளர்ச்சிக்குப் பெரிதும் துணை செய்கின்றன. 1986 மார்ச்சு வரை பொதுத்துறையின் கீழ் 1,800 துணைத் தொழில் அலகுகளை அமைத்துள்ளனர். துணைத் தொழில் அலகுகளி டமிருந்து வாங்கிய மொத்தப் பொருட்களின் மதிப்பு 1973-74 இல் ரூ.21

Scanned with CamScanner

**7. முழுமையாக உற்பத்தித்திறனைப் பயன்படுத்தாமை:** பெரும்பாலான பொதுத்துறை நிறுவனங்கள் தங்களது உற்பத்தி ஆற்றலை முழுமையாகப் பயன்படுத்துவதில்லை. வல்லுநர் குழுவின் மதிப்பீட்டின்படி 1991-92 இல் சுமார் 20 சதவிகிதப் பொதுத்துறை நிறுவனங்கள் அவற்றின் உற்பத்தி சக்தியில் 50 முதல் 75 சதவிகிதம் தான் பயன்படுத்துகின்றன. 24 சதவிகித நிறுவனங்கள் 50 சதவிகிதத்திற்கும் குறைவாகத் தங்களது ஆற்றலைப் பயன்படுத்துகின்றன. பொதுத்துறை நிறுவனங்கள் தங்களது உற்பத்தி சக்தியை முழுமையாகப் பயன்படுத்தினால் மட்டும் தான் நன்கு வளர்ந்து, ஆதாயம் பெற முடியும்.

**8. தொழிலாளர் சிக்கல்கள்:** பொதுத்துறை நிறுவனங்களில் மனித சக்தியைப் பயன்படுத்துவதைப் பற்றி சரியான திட்ட மின்மையால் தேவைக்கு அதிகமாகத் தொழிலாளர்களை வேலைக்கு அமர்த்துகின்றனர். மேலும் தொழிலாளர்களுக்கு வேண்டிய பயிற்சியும் அளிக்கப் பெறவில்லை. தொழிலாளர்கள் பணி செய்கின்ற சூழலும் ஊதிய நிர்ணயமும் மனநிறைவு தருவதாக இல்லை. இதனால் அடிக்கடி தொழிலாளர் வேலை நிறுத்தங்களும் போராட்டங்களும் ஏற்படுகின்றன. இவை நிறுவனத்தின் செயல்பாட்டைப் பாதிக்கின்றன.

**9. நிலையற்ற விலைக் கொள்கை:** பெரும்பாலான பொதுத்துறை நிறுவனங்கள் சரியான, முறையான பணக்கொள்கையைப் பின்பற்றுவதில்லை. எங்கு ஆதாய நோக்கமில்லாமல், நுகர்வோர் நலம் கருதி பொதுத்துறை உற்பத்தியை மேற்கொள்கின்றதோ, அங்கெல்லாம் பொருட்களுக்கு குறைந்த விலையை நிர்ணயிக்க வேண்டும். மற்றைய தொழில்களின் வளர்ச்சிக்குத் துணையாக இருக்கும் பொதுத்துறை நிறுவனங்களில் அதிக ஆதாயமின்றி விலையை நிர்ணயம் செய்ய வேண்டும். சில துறைகளில் உயர்ந்த விலை நிர்ணயிக்க வாய்ப்பு இருக்கும். அவற்றில் அதனைப் பயன்படுத்திக் கொண்டு அதிக விலை நிர்ணயிக்கலாம். இப்படி முறையான நிலையான விலைக் கொள்கையைப் பின்பற்றாததாலேயே பல நிறுவனங்களால் ஆதாயம் பெற இயலவில்லை.

**10. தேவைக்குமேல் மூலதனம்:** பல பொதுத்துறை நிறுவனங்களில் தேவைக்குமேல் முதலீடு செய்துள்ளனர். இதனால் இடுமானம், உற்பத்தி விகிதம் பாதகமாக உள்ளது. நிறுவனத்தின் சக்திக்கு அதிக அளவில் எந்திரங்களை வாங்குவதும், பலவற்றில் மிகுதியாக முதலீடு செய்வதும் இந்நிலைக்குக் காரணங்களாகும்.

## IV பொதுத்துறையின் சிக்கல்களும் தீர்வுகளும்

பொதுத்துறை நிறுவனங்கள் திறமையாகச் செயல்பட வேண்டுமானால் அவற்றின் சிக்கல்களை இனங்கண்டு, முறையாகத் தீர்க்கவேண்டும். அப்பொழுதுதான் பொதுத்துறை நிறுவனங்களிடமிருந்து எதிர்பார்க்கின்ற பலன்கள் கிடைக்கும்.



*சிக்கல்கள்:* பொதுத்துறை நிறுவனங்களைத் திணறடிக்கும் முக்கியமான சிக்கல்கள்:-

**1. அதிகமான அதிகாரமுறைக் கட்டுப்பாடும் வேண்டிய சுதந்திரம் இன்மையும்:** பெரும்பாலான பொதுத்துறை நிறுவனங்களால், அதிகமான அதிகார முறைக் கட்டுப்பாட்டின் காரணமாகவும், விரைந்து செயல்படத் தேவையான பொருளாதார சுதந்திரம் இல்லாததாலும் திறமையாகச் செயல்பட இயலவில்லை. பெரியதாக இருந்தாலும், சிறியதாக இருந்தாலும், ஒவ்வொரு தீர்மானத்திற்கும் மேல்மட்டத்தின் ஒப்புதல்பெற்று செயல்பட வேண்டியதிருக்கின்றது. அரசுத் துறைகள் வாணிப நோக்கில் செயல்படுவதில்லை. ஆதலால் அவற்றால் பல்வேறு விதிமுறைகளைப் பின்பற்ற முடிகின்றது. பொதுத்துறை நிறுவனங்கள், சுற்றி வளைத்துச் செல்லும் அரசு நடைமுறைக்கு ஆட்படுகின்ற பொழுது திறமையாகச் செயல்பட முடியவில்லை.

**2. அரசியல் தலையீடுகள்:** பொதுத்துறை நிறுவனங்கள் சீராகச் செயல்படுவதில் அரசியல் தலையீடுகள் குறுக்கிடுகின்றன. மேல்மட்ட அலுவலர்களை நியமிப்பது முதல், ஒவ்வொரு வாணிப நடவடிக்கையிலும் அரசியல் செல்வாக்குள்ளவர்கள் தலையிடுவதால் நிர்வாகிகளால் எண்ணியபடி செயல்பட முடிவதில்லை.

**3. ஊக்கமின்மை:** பொதுத்துறை நிறுவனங்களை நடத்துகின்றவர்கள் ஊக்கத்துடன் செயல்படுவதில்லை. ஏனெனில் அவர்களுக்குத் தூண்டுதல் இல்லை. நிறுவனம் இலாபத்தில் செயல்பட்டாலும் நட்டத்தில் செயல்பட்டாலும் அவர்களுக்குக் குறிப்பிட்ட அளவு ஊதியம் தான் கிடைக்கின்றது. ஆதலால் இலாபமாக பொதுத் துறை நிறுவனம் செயல்பட அவர்கள் முயல்வதில்லை. தனியார் துறையில் ஆதாயநோக்கமும், நட்டம் ஏற்படக்கூடாதென்ற எச்சரிக்கை உணர்வும் அவர்களைத் திறமையாகச் செயல்படத் தூண்டுகின்றன.

**4. விலை நிர்ணயம்:** பொதுத்துறை நிறுவனங்கள் தக்க வழிகாட்டுதல் இல்லாததால் நிலையான விலைக்கொள்கையைப் பின்பற்றுவதில்லை. விலைக்கொள்கைகள் அடிக்கடி மாறுகின்றன. இதனால் விலை நிர்ணயிப்பதில் குழப்பம் ஏற்படுகின்றது.

**5. மிகப்பெரிய நிறுவனங்கள்:** பொதுத்துறை நிறுவனங்களை மிகப்பெரிய அளவில் அமைக்கின்றனர். இதனால் அவற்றின் உற்பத்தியாற்றலை முழுமையாகப் பயன்படுத்த இயல்வதில்லை. மேலும் இவற்றில் உள்ள எந்திரங்கள் பழமையானவைகளாவும், பின்பற்றுகின்ற தொழில் நுட்பம் பின்தங்கியவைகளாகவும் இருக்

Scanned with CamScanner

கின்றன. இவை பொதுத்துறை நிறுவனங்களின் முன்னேற்றத்தைப் பாதிக்கின்றன.

6. **நிர்வாகத் திறமையின்மை:** பொதுத்துறை நிறுவனங்களை வாணிப, தொழில் பயிற்சியும், முன் அனுபவமும் இல்லாத அலுவலர்கள் நடத்துவதால் அவற்றில் நிர்வாகத்திறமைக் குறைவு காணப்படுகின்றது. இதனால் அவை திறமையாகச் செயல்பட முடிவதில்லை.

7. **தொழிலாளர் சிக்கல்:** தொழிலாளர் சிக்கல்கள் தோன்றி அடிக்கடி வேலை நிறுத்தங்களில் முடிகின்றன. இது பொதுத்துறை நிறுவனங்களை குறியீடுகளை எட்டிப்பிடிக்க இயலாமல் தடுக்கின்றது.

***தீர்வுகள்:*** பொதுத்துறை நிறுவனங்களின் சிக்கல்களைத் தீர்த்து, அவற்றைத் திறமையாகச் செயல்படச் செய்ய கீழ்க்கண்ட தீர்வு முறைகளைக் கூறலாம்.

1. **தனித்து செயல்படச் சுதந்திரம்:** ஒவ்வொரு பொதுத்துறை நிறுவனத்திற்கும் தனித்துச் செயல்படச் சுதந்திரம் இருக்க வேண்டும். வழிகாட்டுதல்கள் மேலிருந்து வரலாம். ஆனால் ஒரு முடிவை எடுத்து, செயல்படுத்துகின்ற உரிமை நிர்வாகிகளுக்கு வரவேண்டும். மேலிருந்து ஒப்புதல் வர வேண்டிய நிலையிலிருந்தால், காலம் தாழ்த்தாது மேல்மட்டத்தில் உள்ளவர்கள் ஒப்புதல் தரவேண்டும். எந்தெந்த வகைகளில் பொதுத்துறை நிறுவனங்களின் நிர்வாகிகள் சுதந்திரகமாகச் செயல்பட முடியுமென்பதை வரையறுத்துக் கொடுக்க வேண்டும்.

2. **அரசியல் தலையீட்டை ஒதுக்குதல்:** பொதுத்துறை நிறுவனங்களின் செயல்பாட்டில் அரசியல் தலையீடு சிறிதும் இருக்கக் கூடாது. இதனை 'பொதுத்துறை நிறுவனங்களின் நிலைக்குழு' (Standing Committee of Public Enterprises) வலியுறுத்துகின்றது. அரசியல் தலையீடு இல்லாமல் பொதுத்துறை நிறுவனங்கள் செயல்படுகின்ற பொழுதுதான், அவற்றால் வாணிப நோக்கோடு திறமையாகச் செயல்பட முடியும்.

3. **சரியான தொழிலாளர் தொடர்புகள்:** நிர்வாகிகள் தொழிலாளர்கள் தொடர்புகள் செம்மையாக அமைய நடவடிக்கைகள் எடுக்க வேண்டும். பொதுத்துறை நிறுவனங்களின் நிர்வாகத்தில் தொழிலாளர்களுக்கும் பங்கு தரவேண்டும். நிர்வாகிகள் தொழிலாளர்கள் கூட்டுப்பொறுப்பு ஏற்பட்டால் நிறுவனங்கள் மேலும் திறமையாகச் செயல்படும்.

4. **தனியார் மயமாக்குதல்:** தொடர்ந்து இழப்பில் நடைபெறும் றுவனங்களைத் தனியாரிடம் விட்டுவிடலாமென்று சிலர் கூறுகின்றனர். னியார்துறை திறமையாகச் செயல்படுமென்ற நம்பிக்கையில் இக் ருத்தை வலியுறுத்துகின்றனர். அரசும் ஓரளவு இதனை ஏற்றுக் கொண்



டிருக்கின்றது. ஆனால் கொள்கையடிப்படையில் பார்க்கின்ற பொழுது இது ஒரு பின்னடைவாக இருக்கும் என்பதைக் கவனிக்க வேண்டும்.

***பொதுத்துறை நிறுவனங்களின் சீர்திருத்தம்:*** 1991 ஜூலையில் அரசு அறிவித்த தொழிற்கொள்கை, அங்காடி முறையில் ஒழுங்கையும், பொதுத்துறை நிறுவனங்களின் செயல்பாட்டில் முன்னேற்றத்தையும் கொண்டுவர, சில குறிப்பிட்ட பொதுத்துறை நிறுவனங்களில் அரசு வைத்திருக்கும் பங்குகளில் ஒரு பகுதியை 'முதலீட்டுக் கலைப்புச்'(Disinvestment) செய்யலாமென்று கருதுகின்றது. 1993 மாாச்சு வரை, பொதுத்துறை நிதி நிறுவனங்களில் ரூ. 4,950 கோடி முதலீடு கலைக்கப்பெற்றுள்ளது. 1993-94 ஆம் ஆண்டின் இறுதிகால பகுதியின் மறுபடியும் முதலீட்டு கலைப்பை அரசு மேற்கொண்டது.

பொதுத்துறை நிறுவனங்களின் பகுதிகளின் முதலீட்டுக் கலைப்புக்குழுவை (The Committee on Disinvestment of Shares in Public State Enterprises) 1992 நவம்பரில் டாக்டர் சி. ரங்கராஜனின் தலைமையில் மாற்றியமைத்தனர். இக்குழுவின் முக்கியமான பரிந்துரைகள்:-

1. முதலீட்டுக் கலைப்பு குறியீட்டு நிலைகள் நமது தொழிற் கொள்கையோடு ஒத்திருக்க வேண்டும். பொதுவாக முதலீட்டுக் கலைப்புச் செய்யும் பங்குகளின் சதவிகிதம் பொதுத் துறைக்கு ஒதுக்க பெற்ற தொழில்களில் 49 சதவிகிதமாகவும் மற்றவற்றில் 74 சதவிகிதமாகவும் இருக்க வேண்டும்.

2. முதலீட்டுக் கலைப்பிற்கு ஆண்டிற்காண்டு குறியீடுகளை நிர்ணயிப்பதைவிட, ஒரு தெளிவான செயல்திட்டத்தை உருவாக்க வேண்டும்.

3. பொதுத்துறை நிறுவனங்களை இணைத்து, பெரிய கழகமாக்குதல், நிதி முறையை மேம்படுத்துதல், சுதந்திரமாகச் செயல்படும் நெறிப்படுத்தும் குழுவை அமைப்பது போன்று பலவற்றையும் உள்ளடக்கிய சீர்திருத்த நடடிக்கைகள் தேவை.

4. பொதுத்துறை நிறுவனங்களின் பங்குகளின் மதிப்பை நிர்ணயிக்கின்றபொழுது, கடந்த காலத்தில் பொதுத்துறை நிறுவனங்கள் செயல்படுவதைப் பாதித்த சூழ்நிலைகளைக் கருத்தில் கொள்ள வேண்டும்.

5. பொதுத்துறையில் பணியாற்றும் ஊழியர்களுக்கும் அலுவலர்களுக்கும் பொதுத்துறை நிறுவனங்களின் பங்குகளை வழங்கச் சிறப்புத் திட்டம் உருவாக்கலாம்.

6. முதலீட்டுக் கலைப்பின் மூலம் கிடைக்கும் வருவாயில் 10 சதவிகிதத்தை பொதுத்துறையின் நிறுவனங்களின் விரிவாக்கத்திற்கும் புத்தாக்கத்திற்கும் கடன் வழங்க ஒதுக்கலாம்.

Scanned with CamScanner